II

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை - 8.6.2011

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

KPN டிராவல்ஸ்–ஐ சேர்ந்த, படுக்கை வசதி கொண்ட குளிர்சாதனப் பேருந்து நேற்றிரவு சுமார் 9 மணிக்கு, சென்னை கோயம்பேட்டில் இருந்து பொள்ளாச்சி நோக்கி புறப்பட்டது. இந்தப் பேருந்தில் 5 பெண்கள், 2 குழந்தைகள் உட்பட 23 பயணிகள் பயணம் செய்தனர். இந்தப் பேருந்தை திரு. நாகராஜன் என்ற ஓட்டுநர் ஓட்டிச் சென்றுள்ளார். இந்தப் பேருந்து PY 01 – BH – 9919 என்ற எண்ணில், புதுச்சேரியில் பதியப் பெற்றுள்ளது. இந்தப் பேருந்து, சென்னை – பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில், சென்னையில் இருந்து சுமார் 100 கிலோ மீட்டர் தொலைவில், வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம், அவலூர் என்னும் இடத்திற்கு அருகே சென்ற போது, அங்கு நின்றிருந்த லாரியைத் தவிர்க்கும் பொருட்டு, பேருந்தின் ஓட்டுநர் பேருந்தை திடீரென்று திருப்பிய போது, கட்டுப்பாட்டை இழந்து, சிறு பாலத்தின் தடுப்புச் சுவற்றில் மோதி, 10 அடி ஆழ பள்ளத்தில் கவிழ்ந்தது. இதில் குளிர்சாதன இயந்திரம் வெடித்து, தீ பிடித்து, அதனால், இந்தப் பேருந்து முழுவதும் எரிந்து எலும்புக் கூடாகி விட்டது. பேருந்து கவிழ்ந்து தீ பிடித்த இந்த விபத்தில், அப்பேருந்தில் பயணம் செய்த 22 பேர் சம்பவ இடத்திலேயே, தீயில் கருகி உயிரிழந்தனர். திரு. கார்த்திகை ராஜன் என்ற ஒரே ஒரு பயணி மற்றும் பேருந்தின் ஓட்டுநர் இந்த விபத்தில் உயிர் பிழைத்துள்ளனர். பேருந்தின் ஓட்டுநர் திரு. நாகராஜன் வேலூர் வடக்கு காவல் நிலையத்தில் சரண் அடைந்தார். வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு, அவருக்கு சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. பயணி, திரு. கார்த்திகை ராஜன், காஞ்சீபுரம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தகவல் அறிந்ததும், சம்பவ இடத்திற்கு ராணிப்பேட்டை மற்றும் அருகில் இருந்த தீயணைப்பு நிலையங்களில் இருந்து தீயணைப்பு வாகனங்கள் சென்று, தீயை அணைத்தன. வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர், சட்டம்-ஒழுங்கு காவல் துறை கூடுதல் இயக்குநர், வடக்கு மண்டல காவல் துறை தலைவர், வேலூர் மாவட்ட காவல் துறை துணைத் தலைவர் மற்றும் காஞ்சீபுரம், வேலூர் ஆகிய மாவட்டங்களின் காவல் துறை கண்காணிப்பாளர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து, தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இந்தச் சம்பவம் பற்றி நேற்று இரவு, அதாவது, 7.6.2011 இரவு, எனக்கு தகவல் கிடைத்தவுடன், மாண்புமிகு போக்குவரத்துறைத் துறை அமைச்சர் திரு. வி. செந்தில் பாலாஜி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் வி.எஸ். விஜய், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. டி.கே.எம். சின்னையா ஆகியோரை உடனடியாக சம்பவ இடத்திற்கு அனுப்பி வைத்தேன்.

இந்த கோர விபத்தில் மரணம் அடைந்த 22 நபர்களின் உடல்கள் கருகிய நிலையில் உள்ளதால், அடையாளம் காண இயலவில்லை. 22 நபர்களின் சடலங்கள் வாலாஜா அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளன.

இப்பேருந்தில் பயணம் செய்தவர்களின் விவரம் KPN டிராவல்ஸ் நிறுவனத்தின் Ticket List-ல் இருந்து பெறப்பட்டுள்ளது. அதை வைத்து பயணம் செய்தவர்களை கண்டு அறியும் பணி நடைபெற்று வருகிறது.

இந்த விபத்தில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், இந்தப் பேரவை உறுப்பினர்களின் ஆழ்ந்த இரங்கலையும், இந்தப் பேரவையின் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்தப் பேருந்து விபத்தில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 1 லட்ச ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா 50,000 ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

******